# 4

### *சபை:*

# இதன் நிலைநாட்டல் (1)

## *(சபை நிலைநாட்டப்பட்ட) காலத்தைக் குறித்த பல்வேறு விவாதங்கள்*

1. ***இதன் நிலைநாட்டலின் காலத்தைக் குறித்து சில முரண்பாடான நிலைப்பாடுகளைக் கூறுக.***
   *சிலர், "ஏதேனில்" என்று கூறுகின்றனர்; மற்றவர்கள் "ஆபிரகாமின் நாட்களில்" என்கின்றனர்; மற்றவர்கள் "யோவான் ஸ்நானனின் நாட்களில்" என்கின்றனர்; மற்றவர்கள், "கிறிஸ்துவின் தனிப்பட்ட ஊழியத்தின் போது" என்கின்றனர்.*
2. ***வேதாகமத்தின் நிலைப்பாடு என்ன?***
   *கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்குப் பிறகு வந்த முதல் பெந்தெகொஸ்தேயன்று.*

## *நிரூபணம்*

## *தாவீதின் சந்ததி அவருடைய வீட்டைக் கட்ட வேண்டி யிருந்தது (2 சாமு. 7:12-17; 1 நாளா. 17:11-15)*

1. ***இந்தக் குறிப்பு(வசனங்)களை வாசித்து இதைக் கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள பிரிவுகளுடன் சரி பார்க்கவும்.***
2. ***அப். நட. புத்தகத்தில் நிறைவேற்றத்தின் குறிப்புகளை வாசிக்கவும், மற்றும் அவைகள் நாத்தானுடைய தீர்க்கதரிசனத்தின் பிரிவுகளுக்கு இணையாக உள்ளனவா என்று காணவும்.***

| **தீர்க்கதரிசனம்** | | **நிறைவேற்றம் (அப். 2:29-35)** |
|---|---|---|
| *1. தாவீதின் சந்ததி கட்டி எழுப்ப வேண்டும்* | பெந்தெகொஸ்தே | *1. கிறிஸ்து, தாவீதின் சந்ததி 2:30* |
| *2. அவருடைய மரணத்திற்குப் பிறகு* | | *2. அவருடைய மரணத்திற்குப் பிறகு 2:29* |
| *3. அவருடைய அரியணையை நிலை* | | *3. உயர்த்தப்பட்ட அரியணை மீது 2:30-35* |
| *4. என் வீட்டைக் கட்டுவேன்* | | *4. கட்டப்பட்ட வீடு 2:30, 47* |

3. ***அப். 2ன் இந்த நிகழ்ச்சிகள் எப்பொழுது நடந்தேறின (அப். 2:1)?***

## *தாவீதின் அரியணை கிறிஸ்துவின் அரியணையாய் இருக்க வேண்டியது (லூக். 1:31-33)*

1. ***"தாவீது" என்பதன் கீழும் மற்றும் "கிறிஸ்து" என்பதன் கீழும் உள்ள வசனக் குறிப்புகளை வாசிக்கவும். "கிறிஸ்து" என்பதின் கீழ் உள்ள ஒவ்வொரு பிரிவும் அதற்கு நேராகத் "தாவீது" என்பதின் கீழ் உள்ளதன் நிறைவேற்றமாக இருக்கிறதா என்று பரிசீலனை செய்யவும்.***

| ***தாவீதினுடையவைகள்*** | பெந்தெகொஸ்தே | ***கிறிஸ்துவினுடையவைகள் (அப். 2)*** |
|---|---|---|
| *1. தாவீதின் அரியணை, 1 இரா. 2:12* | | *1. தாவீதின் அரியணை, 2:30* |
| *2. கர்த்தருடைய அரியணை, 1 நாளா. 29:23* | | *2. கர்த்தருடைய அரியணை, 2:34, 35* |
| *3. அவருடைய அரியணையில் இருத்தல், ஏசா. 9:7* | | *3. அரியணையில் வீற்றிருத்தல், 2:30* |
| *4. அதை நிலைநாட்டுவதற்கு, ஏசா. 9:7* | | *4. அதை நிலைநாட்டியிருத்தல், 2:30* |
| *5. பரலோகத்தில் இருத்தல், சங். 89:35-37* | | *5. தேவனுடைய வலது புறத்தில் இருத்தல், 2:33* |
| *6. அரியணையின் மீது ஆட்சி புரிதல், சங். 110:1, 2* | | *6. ஆட்சி புரிதல், 2:34, 35* |
| *7. சீயோனில் ஆளுகை செய்தல், சங். 110:2* | | *7. சீயோனில் சபை கட்டப்படுதல்* |

2. ***தாவீதின் அரியணையைப் பெற்று அதன் மீதிருந்து ஆளுகை செய்ய வேண்டியிருந்தது யார்? (லூக். 1:31-33)?***
3. ***"அவருடைய அரியணை மீது அமர்த்தப்படுபவரின்" வல்லமை என்னவாக உள்ளது (அப். 2:30)?***

   *"set"(வீற்றிருத்தல்) என்பது kathizo என்ற கிரேக்க வார்த்தையில் இருந்து வருகின்றது மற்றும் இது "ஒருவர் மீது அரசை உறுதிப் படுத்துதல், அப். 2:30" என்று அர்த்தப்படுகின்றது (Thayer).*
4. ***ஆகையால், இந்த முன்னுரைத்தல்கள் எப்பொழுது நிறைவேறின (அப். 2:1)?***

## *காலத்தைச் சுட்டிக்காட்டும் தீர்க்கதரிசனங்கள்*

1. ***"தீர்க்கதரிசனம்" மற்றும் "நிறைவேற்றம்" என்பவற்றின் கீழ் உள்ள வசனக் குறிப்புகளை வாசிக்கவும்.சரியான நிறைவேற்றம் உள்ளதா?***

| **தீர்க்கதரிசனம்** *(ஏசா. 2:2, 3; மீகா 4:1, 2)* | | **நிறைவேற்றம்** *(அப். 2)* |
|---|---|---|
| *1. கடைசி நாட்கள்* | பெந்தெகொஸ்தே | *1. கடைசி நாட்கள், 2:17* |
| *2. கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம்* | | *2. சபை, 2:47; 1 தீமோ. 3:15* |
| *3. மலைகளுக்கு மேலாய் நிலைநாட்டப்படுதல்* | | *3. மலைகளின் மீதுள்ள எருசலேம்* |
| *4. கர்த்தருடைய வசனம்* | | *4. வசனமும் எருசலேமும், 2:5, 14* |
| *5. சீயோனிலிருந்து வேதம்* | | *5. மன்னிப்பின் பிரமாணம், 2:37, 38* |
| *6. எல்லா இனங்களும்* | | *6. எல்லா இனங்களும், 2:5, 36-41* |

***2. ஏசாயா மற்றும் மீகா ஆகியோரின் தீர்க்கதரிசனம் எங்கு நிறைவேறிற்று (அப். 2:1)?***

***3. இவை யாவும் எப்பொழுது மற்றும் எங்கு தொடங்கும் என்று கிறிஸ்து கூறினார் (லூக். 24:47-49)?***

## *சிந்திப்பதற்கான (சில) விஷயங்கள் (ஏசா. 2:2, 3)*

***1. கடைசி நாட்களில் எல்லா இனங்களுக்காகவும் எருசலேமில் சபை நிலைநாட்டப்பட வேண்டியதாக இருந்தது.***

*அ. ‘‘கடைசி நாட்கள்’’ பற்றி யோவான் ஸ்நானன் ஏதேனும் கூறினாரா? இல்லை. யோவான் தமது பிரசங்கித்தலை எங்கு செய்தார் (மத். 3:1)?*

*ஆ. கிறிஸ்து யாரிடம் சென்றார் (மத். 15:24)? அவர் சீஷர்களை யாரிடத்திற்கு அனுப்பினார் (மத். 10:6)?*

*இ. சீஷர்கள் எப்பொழுது சகல நாடுகளுக்கும் செல்ல வேண்டிய தாயிருந்தது (லூக். 24:49ஆ)? அவர்கள் எங்கிருந்து தொடங்க வண்டியதாயிருந்தது (லூக். 24:47ஆ)?*

*ஈ. ஏசாயாவின் இந்தக் காரணிகள் யாவும் எங்கு மற்றும் ப்பொழுது செயல்பட்டன (அப். 2:5, 36-41)?*